ஆணையர் (வணிகவரிகள்)

16 MAR 2023

எழிலகம், சென்னை–600 005.

69

## சுருக்கம்

பணியமைப்பு – தமிழ்நாடு அமைச்சுப்பணி – வணிகவரித்துறை – உதவி ஆணையர் (மா.வ), பாலக்கரை சரகம் – திரு. செ.வினோத் பாண்டி என்பவர் கருணையடிப்படையில் 13.12.2021 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராக தற்காலிகமாகப் பணி நியமனம் செய்யப்பட்டது – பணி வரன்முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

## வணிகவரி மற்றும் பதிவுத் (அ2) துறை

**அரசாணை (டி) எண்.61** **நாள்: 10.03.2023**
**சுபகிருது , மாசி–26,**
**திருவள்ளுவர் ஆண்டு, 2054**

படிக்கப்பட்டது:

1. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 23.01.2020.
2. திருச்சிராப்பள்ளி கோட்ட இணை ஆணையர் (மா.வ) அவர்களின் செயல்முறை ந.கஎண்.9031/ 2021/ஆ2, நாள் 10.12.2021.
3. திருச்சி நகரம் துணை ஆணையர் (மா.வ) அவர்களின் செயல்முறைகள் ந.எ.3383/2018/அ3, நாள் 10.12.2021.
4. முதன்மைச் செயலர்/வணிகவரி ஆணையர் அவர்களின் கடித எண்.ஓய்–3/2623101/2022, நாள் 25.07.2022.

*****

ஆணை:

மேலே நான்காவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் முதன்மைச் செயலாளர்/ வணிகவரி ஆணையர் வணிகவரித் துறையில் திருச்சி வணிகவரி கோட்டம், பாலக்கரை–1 சரகம், உதவி ஆணையர் (மா.வ) அலுவலகத்தில் உதவி ஆணையராக பணிபுரிந்தபோது 25.04.2018 அன்று மறைந்த திரு. இரா.செல்வம் என்பவரின் மகன் திரு. செ.வினோத் பாண்டி என்பவர் கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கக் கோரி 29.12.2018 அன்று விண்ணப்பித்துள்ளார் என்றும், விண்ணப்பம் அரசு ஊழியர் இறந்த நாளிலிருந்து மூன்றாண்டுகளுக்குள் பெறப்பட்டுள்ளது என்றும், கருணை